## <u>சாட்சியின் வாக்குமூலம்</u>

## <u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**Trust OS No. : 458 / 2024**

**PW1 – திரு. ஜடராயன் த/பெ. செங்காலகிருஷ்ணன்**

**13/11/2025**

<u>சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**நேரம் 12.40 மணி**

ஸ்தாபனம் எப்போது முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது தேதி, மாதம், வருடம் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். 150 வருடங்கள் முன்பு என்று தான் கூறியுள்ளேன். மேற்படி டிரஸ்ட் துவக்கப்பட்ட நாளிலிருந்து யாரெல்லாம் நிர்வகித்து வந்தார்கள் என பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் என்ன கணக்கு வழக்குகள் மேற்கொண்டார்கள் என்ற விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்தெந்த சொத்துக்கள் எந்தெந்த வருடங்களில் அறக்கட்டளைக்கு கிடைக்கப்பெற்றது என்ற விவரமும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராதில் குறிப்பிட்டுள்ள வழக்கு எந்த வருடம் யார் கொடுத்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். 2011க்கு முன்னால் இந்த வழக்கு சொத்து எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதி நான் வழக்கு தொடுப்பதற்கு முன்பதாகவே ஸ்தாபனத்திற்கு வழக்கு சொத்தில் உரிமைகிடையாது என அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார் நான் பதில் கொடுத்துள்ளேன். எந்த வருடம் அறிவிப்பு கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2007ல் ஸ்தாபனத்திற்கு சொத்தில் உரிமையில்லை என ஸ்தாபனத்தின் உரிமை மறுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 20/10/2007ல் ஸ்தாபனத்திற்கு வழக்கு சொத்து குறித்து வா.த.சா.ஆ.5ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கு நாங்கள் மறுப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் அனுப்பப்பட்டுள்ளது. ஸ்தாபனத்தின் வழக்கு சொத்து உரிமை மறுக்கப்பட்டுள்ளபோது அதற்கு உரிய நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்றால் நாங்கள் காவல் நிலையம் சென்றோம் எனக்கு சரியாக தெரியவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பதாக வேறு ஏதாவது வழக்கு

சதீஷ்குமார் பெயரில் வழக்கு செய்துள்ளேனா என்றால் இல்லை. ஸ்தாபனத்தின் சொத்தின் உரிமை மறுக்கப்பட்ட பிறகு தான் உரிமையே இல்லாமல் 2011ஆம் வருடத்தில் அறக்கட்டளையின் பெயரில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொத்து அறக்கட்டளைக்கு எப்படி வந்தது என்று சொல்லாமல் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் மேற்படி வழக்கு சொத்து சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**நேரம் 12.55 மணி**

**குறுக்க விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.